# இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றத்தின்

## ஆண்டு அறிக்கை

## 1973 நிதியாண்டு

### உள்ளுறை


அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பணம் 1

<u>ஆண்டு அறிக்கை</u>

I. விஞ்ஞான மன்றம்: உறுப்பினர்கள் 3
II. பதவியினர் 4
III. தொழிற்பாடுகள் 5
பின்னிணைப்பு I நிலையியற் குழுக்களினதும் ஆயங்களினதும் உறுப்பினர்கள் 1973 23
பின்னிணைப்பு II 1973 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்கள் 25
பின்னிணைப்பு III மானியம் பெற்றவர்களின் வெளியீடுகள் 29

<u>கணக்குக் கூற்று</u>

IV. வருமான செலவுக் கணக்கு 37
V. ஏனைய வளங்களுக்கான செலவுகள் பற்றிய பட்டோலை 39
VI. ஐந்தொகை 40
VII. ஐந்தொகையும் ஏனைய வளங்களும் 42
VIII. சஞ்சிகை விற்பனை லாப நட்டக் கணக்கு 43
IX. கணக்காய்வாளர் அதிபதியின் சான்றிதழ் 44
X. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 45

இலங்கை தேசிய விஞ்ஞான மன்றம்,
47/5, மெயிட்லன்ட் இடம்,
கொழும்பு 7.
12-05-1975.

கௌரவ கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சர் அவர்களுக்கு,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சு,
48, சிறி ஜினரத்தன வீதி,
கொழும்பு 2.

அன்பார்ந்த ஐயா,

1973 சனவரி 1 ஆந் தேதி முதல்
1973 டிசம்பர் 31 ஆந் தேதி
வரையிலான காலப்பகுதிக்குரிய
இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின்
ஆண்டறிக்கை

1968 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலங்கை தேசிய விஞ்ஞான மன்றச் செய்சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கிணங்க, 1973 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கையைத் தங்கள் முன்னர் சமர்ப்பிக்கிறேன்.

இவ்வறிக்கை,

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட வருமான செலவுக் கணக்கின் பிரதி,
(ஆ) கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகைக் கணக்கின் பிரதி,
(இ) கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள,
ஓ. டப்ளியூ. ஐயரத்ன
தலைவர்
தேசிய விஞ்ஞான மன்றம்.

## இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றம்

1973 ஜனவரி 1ஆந் தேதி முதல் 1973 திசம்பர் 31 ஆந் தேதி வரையிலான காலப்பகுதிக்குரிய

ஆண்டு அறிக்கை

-*-

1. தேசிய விஞ்ஞான மன்றத்தின் உறுப்பினர்கள்

**தவிசாளர்**

கலாநிதி ஒ. டபிள்யு. ஜயரத்தின

(1968 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத்தேசிய விஞ்ஞான மன்றச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டவர்)

**உப-தவிசாளர்**

திரு. டீ. பீ. பட்டியாராய்ச்சி

(1968 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத்தேசிய விஞ்ஞான மன்றச் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின்படி தெரிவுசெய்யப்பட்டவர்)

**உறுப்பினர்கள்**

பேராசிரியர் . பீ. ஏ. அபேவிக்கிரம
டாக்டர் ஆர். சி. த சில்வா
டாக்டர் எம். ஏ. பீ. தேவநாதன்
~~டாக்டர் எஸ். என். த. சில்வா (1973 செப்டெம்பரில் நியமிக்கப்பட்டவர்)~~
டாக்டர் எல். எச். பர்முந்த
டாக்டர் எல். பீ. டீ. குணவர்த்தன
திரு. எஸ். எவ். லொரேன்சியஸ்
திரு. ஏ. எஸ். மெண்டிஸ்
திரு. டி. டப்ளியு. மெண்டிஸ்
திரு. ஈ. டீ. முனசிங்கா (1973 யூனில் நியமிக்கப்பட்டவர்)
கலாநிதி டபிள்யு. ஆர். என். நத்தானியல்
டாக்டர் சீ. ஆர் பானபொக்கே
டாக்டர் ஜே. டபிள்யு. எல். பீரிஸ்

டாக்டர். ஓ. எஸ். பீரிஸ்

திரு. எம்எம். பிள்ளை

திரு. என். டபாலராசன் (1973 யூனில் விலகிப்போனார்)

திரு. ஜே. ஜே. இராஜநாயகம்

திரு. எம். ரணவீரா

பேராசிரியர் கே. என். செனவிரத்ன

திரு. ஏ. ஈ. கே. திசவீரசிங்கா

## செயலாளர் அதிபதி

டாக்டர் ஜீ. சீ. என். ஜயசூரியா

## பதவியினர்

**செயலாளர் அதிபதி**

| | |
|---|---|
| திரு. ஜீ. சீ. என் ஜயசூரியா – | பீ. எஸ். சீ (இல.) பீ. எச்டீ (செபில்டு) எவ். ஆர். ஐ. சீ எவ். ஐ. ஆர. சீ. |

**விஞ்ஞான உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| திருமதி சீரா ஐ. குந்தரிகோட | பீ. எஸ். சீ. (இல.) டீ. எச். டீ (நொற்றிங்காம்) எவ். ஐ. ஆர. சீ. |
| திருமதி மரியா த சில்வா | பீ. எஸ். சீ. (இல.) |
| திரு. எம். டப்ளியூ. ஆர். என். த சில்வா – | பீ. எஸ். சீ. (இல.) பீ. எச். டீ. (லிவர்பூல்) |
| திருமதி எம். பராங்கனி தர்ப்பிரேவ் | பீ. எஸ். சீ. (இலங்.) பீ. எச். டீ (சதம்டன்) |
| திரு. என். சண்முகரத்தினம் | பீ. எஸ். சீ. விவசாயம் (இல.) எம். எஸ். சீ. விவசாயம் (யப்பான்) |
| திருமதி. சுவர்ணபீ. பிரேமிஸ் | பீ. எஸ்சி (இல.) |

**உதவிச் செயலாளர்**

| | |
|---|---|
| ஜே. சீ. பீ. ஜயசிங்கா | பீ. கொம். (இல.) |

**கணக்காளர்**

எம். எவ். உறாதி

## 11 மன்றத்தவர்

1972 மே 2 ஆந் தேதியில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட மன்றத்தவர். 1973 ஆம் ஆண்டிலும் பதவி வகித்து வந்தார்கள். திரு. ஈ. ஐ. முனசிங்கா 1973 யூன் மாதத்திற் திரு. என். பபாலராசன் விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டார். டாக்டர் எஸ். ரீ. ஜீ. பரீருந்து அவர்கள். விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு 1973 செத்தெம்பரில் மன்ற உறுப்பினராக டாக்டர் என். எம். த. சில்வா நியமிக்கப்பட்டார்.

மீளாய்வு ஆண்டின்போது பதின்மூன்று மன்றக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 111 மன்றத்தின் செயற்பாடுகள்

மன்றத்தின் உபயோகத்திற்காக 47/5 கொழும்பு 7 இல் மேட்லன்ட் இடத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடம் 1973 மார்ச்சு மாதத்தில் வீடமைப்புக் கட்டுமான அமைச்சால் மன்றத்திடம் கையளிக்கப்பட்டது. கொழும்பு 7 இல் ஹோர்ட்டன் இடத்தின் 69 ஆம் இலக்கத்தில் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் வரை அமைந்த தற்காலிக விடுதியிலிருந்து 1973 மார்ச்சு மாதம் 29 ஆந் தேதியன்று எமது செயலகம் இப்புதியவளவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இப்புதிய கட்டடத்தின் முதலாம் இரண்டாம் மாடிகளில் இம்மன்றதின் செயலகம் குடிகொண்டிருக்கும். அவைக்களமாக இருக்கவேண்டுமென நிருமாணிக்கப்பட்டிருந்த தரைமாடியானது தற்பொழுது அலுவலகமொன்றுக மாற்றப்பட்டு அணுசக்தி அதிகார சபையால் உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

நல்ல இடவசதியுள்ள விடுதியொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டபின் மன்றத்திற்குக் கூடுதலான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய வாய்ப்பு உண்டானது. இவ்வாண்டுக் காலத்தில் மூன்று மேலதிக விஞ்ஞான உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கணக்காளர் ஒருவரும் உதவியாளர்களும் சேர்க்கப்பட்டனர். மன்றத்தின் பதவியினர்களின் நிலை சீராக்கப்பட்ட காரணத்தால் இவ்வாண்டுக் காலப்பகுதியின் போது பல புதிய செய்திட்டங்களை மன்றம் தொடங்கியது.

மன்றத்தின் பிரதான செயற்பாடுகள் சிலவற்றின் பொழிப்பு வருமாறு:-

### ஆராய்ச்சி, மானியங்கள், புலமைப்பரிசில்கள் சபை.

ஆராய்ச்சி மானியங்கள் குழுவினதும் புலமைப்பரிசில்கள் சபையினதும் செயற்பாடுகள் பெரும்பாலும் ஒன்றுக்குமேல் ஒன்றுக அமைவதனைத் தடுக்க எண்ணி, ஆராய்ச்சி மானியங்கள் ஆராய்ச்சி பையற்பரிசில்கள், ஆராய்ச்சி மாணக்கர் பரிசில்கள் ஆகியவற்றை வழங்கும் நோக்கத்துடன் " ஆராய்ச்சி மானியங்கள், புலமைப் பரிசில்கள் சபை" என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்ட குழுவொன்றை உருவாக்க மன்றம் முடிவு செய்துள்ளது.

1973 ஆம் ஆண்டுக்கான ஆராய்ச்சி மானியங்கள், ஆராய்ச்சி மாணுக்கர் பரிசில்கள், ஆராய்ச்சி பெயற்பரிசில்கள் ஆகியவை பற்றிய விளம்பரமொன்று 1973 யூன் மாதம் 22 ஆந் தேதியன்று அரசாங்க கசற்றில் வெளியிடப்பட்டிருந்தது. அந்நியச் செலாவணியைசவும் கிடைக்கப்படுவதில் உல என்றும் பின்வரும் செய்திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுமென்றும் அவ்விளம்பரத்திற் கூறப்பட்டிருந்தது.: -

(1) பப்பாசி மரம், கொடித்தோடை முதலிய தாவரங்களிற் காணப்படும் வைரசு நோய்களைக் கட்டுப்படுத்தல்

(2) கிருமிநாசினிகளாலும் களைநாசினிகளாலும் மனிதனுக்கு ஏற்படும் நன்மை தீமைகள்

(3) கடுதாசித்தாள், மற்றும் அவ்வற்றோடு சம்பந்தப்பட்ட உற்பத்திப்பொருள்கள் காரணமாக ஏற்படும் சூழல் மாசுபாடும் அதனை நிவிர்த்தி செய்யத்தக்க நடவடிக்கைகளும்.

(4) குடிசைக் கைத்தொழிலாக வெண்ணெய் உற்பத்தி செய்தல்

(5) உஷ்ண வலயத்தில் மழைநீர் காரணமாக ஏற்படும் நிலநீர் மீளேற்றம் பற்றிய ஆய்வுகள்

(6) தானியப் பாதுகாப்பும் களஞ்சியப்படுத்துதலும்

(7) பழவகை, மரக்கறிவகைப் பாதுகாப்பும் களஞ்சியப்படுத்தலும்

(8) தவிட்டில் இலிபாசை உயிர்ப்பும் அதன் உயிர்ப்புத்தேய்வும்

19.73 இல் ஆராய்ச்சி மானியங்கட்கான அறுபத்தெட்டு விண்ணப்பங்கள் கிடைத்தன. இவற்றின் மூலம் மூன்று வருட காலத்திற்கென மொத்தம் 1;269,136;15 ரூபா கேட்கப்பட்டிருந்தது. அது வருமாறு: -

| | | |
|---|---|---|
| 1 ஆம் வருடம் | - | ரூபா 739,318.35 |
| 2. ஆம் வருடம் | - | ரூபா 337,968.90 |
| 3 ஆம் வருடம் | - | ரூபா 191,848.90 |
| மொத்தம். ரூபா | | 1,269,136.15 |

எனினும், 1973 ஆம் ஆண்டின் செலவுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பண 320,000.00 ரூபாவாகும். இதனைக் கொண்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள செய்திட்டங்களும் இனி ஆரம்பிக்கவுள்ள புதிய செய்திட்டங்களும் செயற்படுத்தப்படல் வேண்டும். தற்பொழுது அரசாங்கத்தின் நிதியாண்டு பஞ்சாங்க முறைப்படி அமைந்திருக்கின்றபடியாலும் பல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாலும், 1973 ஆம் ஆண்டுக்குரிய நிதியங்கள் 1973 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் வழங்கப்படவும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய செய்திட்டங்களுக்கான பணம் இவ்வாண்டு நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட முடியாததால் அவை 1974 ஆம் ஆண்டு ஆராய்ச்சி மானியங்களாகக் கருதப்பட்டு அவற்றிற்கான பணம் 1974 ஆம் ஆண்டின் முற்பாகத்தில் வழங்கப்பட மன்றம் எண்ணியுள்ளது.

1973 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி மானியங்களை வழங்கும்போது தேசிய விஞ்ஞான மன்றம் பின்வரும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(1) மன்றத்தால் விளம்பரப்படுத்தப்படும் செய்திட்டங்களுக்கு முதன்மை அளித்தல்.

(2) நாட்டின் பொருளாதார, சமூக, கல்வி அபிவிருத்தியோடு தொடர்புபட்ட செய்திட்டங்களைக் கருத்திற் கொள்ளல். பெரும்பாலும் உடனடி உபயோகமுள்ள நன்மைகளுக்கு முதன்மை கொடுக்கப்படல் வேண்டும்.

(3) இலங்கையில் பட்டதாரி வாலிபர் ஒருவர் படிப்பு முடிவின்போது எம்.எஸ்.சீ. அல்லது பி.எச்.டீ. பட்டத்திற்கு ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்கத் தக்கவாறு பட்டத்தின் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல். இங்ஙனம் பட்டம் பெற்ற பின் மேற்படிப்பு மேற்கொள்ளக்கூடிய கோரிக்கைகளை மன்றம் ஆதரித்துள்ளது.

(4) ஏலவே தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியங்களைப் பெற்று தாம் மேற்கொண்ட செய்திட்டங்களைப் பூர்த்தி செய்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டா.

1973 ஆம் ஆண்டிற்காய மன்றத்தால் சிபாரிசு செய்யப்பட்டு அமைச்சரது அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி மானியங்களின் முடிவான பட்டியலொன்று 11 ஆம் இணைப்பில் தரப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டுக்கென அங்கீகாரம் பெற்ற செய்திட்டங்களின் பட்டியலொன்று 1974 ஆம் ஆண்டறிக்கையில் தரப்படும்.

## ஆராய்ச்சி மானியங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிதியங்களின் பகுப்பு

1973, 1974 ஆம் ஆண்டுகளில் பல்வேறு விஞ்ஞான செயற்பாட்டுத் துறைகள் சார்ந்த செய்திட்டங்களின் தொகையும் நிதி உதவிகளை வேண்டப்பட்ட செய்திட்டங்களின் தொகையும் ஒப்புநோக்கப்பட்ட பட்டியலொன்றை 1 ஆம் அட்டவணையிற் காணலாம்:-

### அட்டவணை 1

| தொகுதி | முன்மொழியப் பட்டமொத்தத் தொகை. | 1973 க்கான அங்கீகாரம் பெற்றதொகை | 1974 க்கான அங்கீகாரம் பெற்றதொகை |
|---|---|---|---|
| 1. கமத்தொழிலும் விலங்குப் பண்ணையும் | 2 | - | 1 |
| 2. உயிரியல் விஞ்ஞானங்கள் | 25 | 10 | 10 |
| 3. இரசாயன விஞ்ஞானங்கள் | 7 | 2 | 1 |
| 4. பௌதிக விஞ்ஞானங்கள் | 7 | 2 | 2 |
| 5. மருத்துவ விஞ்ஞானங்கள் | 19 | 2 | 12 |
| 6. சமூக விஞ்ஞானங்கள் | 4 | 2 | 1 |
| 7. பொறியியல் விஞ்ஞானங்கள் | 4 | - | 3 |
| மொத்தம் | 68 | 18 | 30 |

1973, 1974 ஆம் ஆண்டுகளில் பல்வேறு விஞ்ஞான செயற்பாட்டுத் துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியங்களின் தொகையும் அவற்றிற்கு வேண்டப்பட்ட தொகையும் ஒப்புநோக்கப்பெற்ற கணக்குகள் 11 ஆம் அட்டவணையிற் தரப்பட்டுள்ளன:-

### அட்டவணை 11

ஆராய்ச்சி மானியங்களுக்கென அனுமதித்த நிதியங்கள்

| தொகுதி | வேண்டப்பட்ட மொத்த நிதியம் | அனுமதிக்கப் பட்டநிதியம் 1974 | அனுமதிக்கப்பட்ட நிதியம் -1974 |
|---|---|---|---|
| 1. கமத்தொழிலும் விலங்குப் பண்ணையும் | 25,900.00 | - | 10,200.00 |
| 2. உயிரியல் விஞ்ஞானங்கள் | 546,783.15 | 96,160.00 | 201,263.15 |
| 3. இரசாயன விஞ்ஞானங்கள் | 163,900.00 | 20,200.00 | 14,400.00 |
| 4. பௌதிக விஞ்ஞானங்கள் | 134,650.00 | 32,750.00 | 28,400.00 |
| 5. மருத்துவ விஞ்ஞானங்கள் | 246,313.00 | 46,500.00 | 32,335.00 |
| 6. சமூக விஞ்ஞானங்கள் | 72,035.00 | 11,435.00 | 14,250.00 |
| 7. பொறியியல் விஞ்ஞானங்கள் | 80,100.00 | - | 50,100.00 |
| மொத்தம் | 1,269,136.15 | 207,045.00 | 400,948.15 |

ஒன்று, இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்காலப்பகுதிகளைக் கொண்ட செய்திட்டங்களுக்கு நிதி காணல் தேசிய விஞ்ஞான மன்றத்தின் கொள்கையாகும். இரண்டு அல்லது மூன்று கால எல்லையுடைய செய்திட்டங்கள் சார்பில் முறையே அவற்றின் இரண்டாம் ஆண்டுக்குரிய அல்லது இரண்டாம், மூன்றும் ஆண்டுகளுக்குரிய செலவுத் தொகைகள் 11 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. 111 ஆம் அட்டவணையையும் காண்க.

## 1973 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி மானியங்கள்

1973 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி மானியங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியங்களின் வகைப்பாடு 111 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது:-

அட்டவணை 111

ஆராய்ச்சி மானியங்கள் 1973

| தொகுதி | நிதியங்கள் 1ஆம் ஆண்டு | நிதியங்கள் 2ஆம் ஆண்டு | நிதியங்கள் 3ஆம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. கமத்தொழிலும் விலங்குப் பண்ணையும் | - | - | - | - |
| 2. உயிரியல் விஞ்ஞானங்கள் | 54,170 | 25,670 | 16,320 | 96,160 |
| 3. இரசாயன விஞ்ஞானங்கள் | 20,200 | - | - | 20,200 |
| 4. பௌதிக விஞ்ஞானங்கள் | 20,550 | 12,200 | - | 32,750 |
| 5. மருத்துவ விஞ்ஞானங்கள் | 16,500 | 15,000 | 15,000 | 46,500 |
| 6. சமூக விஞ்ஞானங்கள் | 5,025 | 4,800 | 1,610 | 11,435 |
| மொத்தம் | 116,445 | 57,670 | 32,930 | 207,045 |

## கனிட்ட ஆராய்ச்சி மானியங்கள் :-சுகாதாரம்

1972 ஒக்டோபர் மாதத்தில் தொழில் பயிலும் காலப்பகுதியை முடித்துக் கொண்ட சுகாதார உத்தியோகத்தர்களுக்கு அல்லது 1973 ஒக்டோபர் மாதத்தில் தொழில் பயிலும் காலப்பகுதியை முடிக்கும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி நிலையியற் குழு (சுகாதாரம்)வின் சிபாரிசின்படி தேசிய விஞ்ஞான மன்றம் மூன்று கனிட்ட ஆராய்ச்சி மானியங்களை வழங்க அங்கீகாரம் அளித்துள்ளது. நன்னாய்வுக்குத் தேவைப்படும் செலவினங்களுக்காக ஒரு வேட்பாளருக்கு தலா 1000/- ரூபா கொடுக்கப்பட முடிவு செய்துள்ளது.

இக் கொடைகளுக்கான விண்ணப்பங்கள் யூன் மாதத்தில் கோரப்பட்டன. ஆராய்ச்சி நிலையிற் குழு (சுகாதாரம்) வால் விதந்துரைக்கப்பட்ட பின்வரும் கொடைகளுக்கு தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஒப்புதலும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சரது அங்கீகாரமும் கொடுக்கப்பட்டுள்ளன.

| பெயரும் முகவரியும் | செய்திட்டத்தின் பெயர் |
|---|---|
| மருத்துவர் நந்தா வீரசூரியா<br>மருத்துவ உத்தியோகத்தர்<br>வெளி நோயாளிப் பகுதி<br>தலைமை மருத்துவசாலை<br>மாத்தறை. | "பயிலேரியாத் தோற்றவிலை நிருபிக்கக்கூடிய காரணங்களை அறிய வழிகோலும் வகையில் மாத்தறை மாவட்டத்தில் மூட்டழற்சி பற்றிய நுண்ணாய்வு". |
| மருத்துவர் மஹேசரா பெருமைளூர்<br>மருத்துவமனை உத்தியோகத்தர்.<br>பெரிய மருத்துவச்சாலை காலி, | "மனிதவின குண்டிக்காய்களின் மரண விசாரணை மாதிரிப் பொருள்களின் ஆய்வு உட்பட எலிகள், மற்றும் ஏனைய பாலூட்டிகளின் குண்டிக்காய்கள் மீதான றஸல் விரியன் நஞ்சின் தாக்கம்". |
| மருத்துவர் பரமேஸ்வர ஐயர்<br>அம்பிகாபதி,<br>சுற்றயற் கூற்றின் பொறுப்பு<br>மருத்துவ உத்தியோகத்தர்<br>ஹெறம்மாதகம. | "குடும்பக் கட்டுப்பாடு – ஒரு சிறிய வட்டத்துக்குள் அதன் தாக்கம் பற்றிய ஆய்வு". |

ஆராய்ச்சி மாணாக்கர் பரிசில்கள்

1973 யூன் 14 ஆந் திகதியன்று அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் தேசிய விஞ்ஞானமன்ற மாணாக்கர் பரிசில்கள் பற்றிய விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட பின், அறுபத்தேழு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன.

இவ்வறுபத்தேழு விண்ணப்பங்களுள் முப்பத்து ஆறு மட்டுமே தகுதியுடையனவாக விருந்தன. பெருந்தொகையான விண்ணப்பங்கள் கிடைத்தமையால் நாட்டின் பொருளாதார, கல்வி அல்லது சமூக அபிவிருத்தியை நோக்கில் கொண்டு உத்தேசிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி விண்ணப்பங்களைப் பிரதான அளவுகோலாகக் கொண்டு விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு ஒன்பது விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டனர். ஒன்பது பேர்களும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர். ஆராய்ச்சி மானியங்கள், பரிசில்கள் சபை ஐந்து ஆராய்ச்சி மாணாக்கர் பரிசில்களை வழங்கச் சிபாரிசு செய்தது. இச்சிபாரிசுகள் மன்றத்தின் ஒப்புதலும் கைத்தொழில், விஞ்ஞான அமைச்சரது அங்கீகாரமும் பெற்றுள்ளன.

மாணுக்கர் பரிசில்கள்

| பெயரும் நிறுவகமும் | செய்திட்டம் | மேற்பார்வையாளர் |
|---|---|---|
| திரு. ஆர். டீ. த. சில்வா<br>வித்தியாலங்கார வளாகம் | (1) "குறிப்பாக சாகஸ்சும் இனங்களின் அலிக்னிக்கமில் உள்ளடக்கம் பற்றிய ஆய்வு உட்பட, அவற்றின் வாழ்க்கை வட்டம், வளர்ச்சிவீதம், புத்துயிர்ப்பு என்பனபற்றிய ஆய்வு"<br>(2) "கடல் அழுக்கக்காலில் சாகஸ்சும் இனங்களின் பங்கு" | திரு. எம். டபிள்யு. ஆர். என். த. சில்வா, பேராசிரியர் ஐ. பாலசூரியா வித்தியாலங்கார வளாகம் இலங்கைப் பல்கலைக் கழகம். |
| திரு. எம். டபிள்யு. ஏ. த. சில்வா<br>பேராதனை வளாகம் | "பேருவலைக்கும் கம்பாந்தோட்டைக்குமிடையே மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான சிறப்புத் தடைகள்". | திரு. சுனிமல் பர்ணந்து பேராதனை வளாகம் இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை |
| செல்வி எம். பி. எல். டபிள்யு. மெண்டிஸ் | "தவிட்டில் இலிபாசை உயிர்ப்பும் அதன் உயிர்ப்புத் தேய்வும்." | டாக்டர் எஸ். செந்தி சண்முகநாதன். டாக்டர் கே. ரி. டி. த சில்வா வித்தியோதய வளாகம் இலங்கைப் பல்கலைக் கழகம், நுகெகொட. |
| திரு. கே. ஜெ. ரி. தயானந்தா<br>பேராதனை வளாகம் | "(சிம்போ போகன் நாடுஸ்) காவட்டம் புல் வர்க்கத்தெரிவும் சீராக்கமும்" | டாக்டர் எச். எம். டபிள்யு. கேரத் கமத்தொழில் திணைக்களம், இலங்கைப் பல்கலைக்கழகம், சி. ஐ. எஸ். ஐ. ஆர். |
| செல்வி பி. ஏ. பீ. பெரேரா<br>வித்தியலங்கார வளாகம் | "(முகில் செபாலுஸ்) மலற் இன மீனின் பரிசோதனை வளர்ப்புக்கான சிறப்பு நிலைகளைத் தீர்மானித்தல்" | டாக்டர் எஸ். எஸ். த் சில்வா வித்தியலங்கார வளாகம், இலங்கைப் பல்கலைக் கழகம், களனி. |

1970/71 கொடைகள்

1970/71 இல் அளிக்கப்பட்ட மூன்று மாணுக்கர் பரிசில்களுள் செல்வி டபிள்யு.எம்.கே.வீரசேகரா, திருவாளர் வீ.யு.த.எஸ்.ஜயசூரியா ஆகியோர் தற்பொழுது இக்கொடையின் மூன்றும் ஆண்டுத் தவணையில் இருக்கின்றுர்கள். செல்வி கே.பி.ஜயதிலக்கா வேறிடத்தில் நிரந்தரமான உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு இக்கொடையினைக் கைவிட்டார்.

1971/72 கொடைகள்

1971/72 இல் அளிக்கப்பட்ட நான்கு மாணுக்கர் பரிசில்களுள் திரு.டி.எச்.யு.விமலசிறி, திரு.எஸ்.பொன்னுச்சாமி, திரு.ஜி.சி.சுபசிங்க ஆகியோர் தற்பொழுது இக்கொடையின் இரண்டாம் ஆண்டுத் தவணையில் இருக்கிறுர்கள். திரு.எம்.ஏ.ஆர்.குலரத்தின வேறிடத்தில் நிரந்தரமான உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு இக்கொடையினைக் கைவிட்டார்.

ஆராய்ச்சி பையற்பரிசில்கள் 1973 கொடைகள்

1973, ஜூன் 14 ஆம் தேதிய அரசாங்க கசெற்றில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பையற்பரிசில்கள் பற்றி விளம்பரப்படுத்தப்பட்டபோது நாலு விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டன. அந்நான்கினுள் இரண்டு விண்ணப்பங்கள் மட்டுமே தகுதியுடையனவாகக் காணப்பட்டன. நேர்முகத் தேர்வுக்கு வரும்படி அழைக்கப்பட்ட அவ்விரு விண்ணப்பகாரர்களுள் ஒருவர் மட்டுமே நேர்முகத் தேர்வுக்குச் சமூகமாயிருந்தார்.

"பெனெயிட் இன இறுல்கனே வளர்ப்பதற்குள்ள சாத்தியக் கூறுகள் பற்றியும் அதன் இடைநேர் விளைவான குறித்த சில நீர் உயிரியல் சார் நுண்ணாய்வுகள் பற்றியும்" ஆராய்ச்சி செய்வதற்கென வித்தியோதய வளாகத்தின் உயிரியல் விஞ்ஞானங்கள் துறையைச் சேர்ந்த திரு.ஜெ.ஜினதாச என்பவருக்குப் பையற் பரிசிலொன்று வழங்குவதென ஆராய்ச்சி மானியங்கள், புலமைப் பரிசில்கள் சபை விதந்துரைத்தது. திரு.ஜினதாச பேராசிரியர் ஏ.சி.ஜெ.வீரக்கோனுடன் கூட்டாக ஆய்வு நடாத்துவார்.

1970/71, 1971/72 கொடைகள்.

1970/71 இல் பையற்பரிசில்கள் எவையும் வழங்கப்படவில்லை. 1971/72 ஆம் ஆண்டுக்கென டாக்டர் எல்.ஜெ.எம் கூறேக்கு வழங்கப்பட்ட பையற்பரிசில் அவரது வேண்டுகோளின் பேரில் பிற்போடப்பட்டது. அவர் 1974 ஜனவரியில் அவ் ஆய்வினைத் தொடங்கவிருக்கின்றுர்.

1969/70 இல் அளிக்கப்பட்ட மானியங்களின் வளர்ச்சி பற்றிய பொழிப்பு

1971/72 ஆம் ஆண்டு முடிவில், எஞ்சியுள்ள பத்தொன்பது செயற்திட்டங்களுள்,

(1) ஒன்று, முடிவடைந்துள்ளது

(2) பதினாறு, தேசியவிஞ்ஞான மன்றத்தின் திருப்திக்கு நடைபெற்று வருகின்றன.

(3) நாலு, அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளிலிருந்து உரிமங்கள் மூலம் வெளிநாட்டிலிருந்து உபகரணமும் இரசாயனப் பொருட்களும் பெற்றுக் கொள்வதிலுமுள்ள சுணக்கத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

1970/71 இல் அளிக்கப்பட்ட மானியங்களின் வளர்ச்சி பற்றிய பொழிப்பு.

1971/72 ஆம் ஆண்டு முடிவில், எஞ்சியுள்ள இருபத்திமூன்று மானியங்களுள்,

(1) ஒன்று, முடிவடைந்துள்ளது

(2) பத்தொன்பது தேசிய விஞ்ஞானமன்றத்தின் திருப்திக்கு நடைபெற்று வருகின்றன.

(3) மானியம் பெற்றவர் செயற்றிட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்த முடியாமையினால் ஒன்று கைவிடப்பட்டுவிட்டது.

(4) ஒன்று, அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளிலிருந்து உரிமங்கள் மூலம் வெளிநாட்டிலிருந்து உபகரணமும் இரசாயனப் பொருள்களும் பெற்றுக் கொள்வதிலுள்ள சுணக்கத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

1971/72 இல் அளிக்கப்பட்ட மானியங்களின் வளர்ச்சி பற்றிய பொழிப்பு

1971/72 இல் அளிக்கப்பட்ட முப்பத்தொன்பது மானியங்களுற்,

(1) முப்பத்தொன்று, தேசிய விஞ்ஞானமன்றத்தின் திருப்திக்கு நடைபெற்று வருகின்றன.

(2) அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறுமையினால் மூன்று திட்டங்கள் தடைப்பட்டுள்ளன.

(3) மானியம் பெற்றவர்களினது வேண்டுகோளின் மீது இரண்டு திட்டங்கள் 1974 க்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளன.

(4) பொருத்தமான ஆராய்ச்சி உதவியாளர் கிடைக்கப்பெறுமையினால் ஒருதிட்டம் தடைப்பட்டுள்ளது.

(5) மானியம் பெற்றவர்கள் மேற்கொண்டு திட்டத்தினைச் செயற்படுத்த முடியாமையினால் இரண்டு திட்டங்கள் கைவிடப்பட்டன.

1971/72 ஆண்டறிக்கையின் பின்னிணைப்பு 11/இல் வெளியிடப்படாத 1969/70, 1970/71, 1971,72 ஆண்டுகளில் அளிக்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களிலிருந்து கிடைக்கப்பெறும் வெளியீடுகள் பின்னிணைப்பு 111 இல் தரப்பட்டுள்ளன.

## தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆவணப்படுத்தல் நிலையம்

நிதிகள் கிடைக்கப்பெறுமையினாலும் திட்டமிடல் அமைச்சின் அபிப்பிராயப்படி அதி முதன்மை வாய்ந்ததாக இல்லாமையினாலும், முன்னைய ஆண்டின்போது, இத்திட்டத்திற்காக ஐ.நா.அ.தி.உதவி கோரி கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சினால் திட்டமிடல் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள் நிரா கரிக்கப்பட்டது. இந்நிலையத்தைத் தாபிப்பதில் அக்கறை கொண்டிருந்த இலங்கைத் தேசிய நூல் நிலையச் சேவைகள் யாவையும் இத்திட்டத்தில் அவ்வள வாக அக்கறை கொண்டிருக்கவில்லையென கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

மன்றத்தின் செயலாளர் அதிபதியும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்த (விஞ்ஞான அலுவல்கள்) உதவிச் செயலாளரும் திட்டமிடல் பணிப்பாளர் அதிபதியுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதன் பயனாக 1975 இல் இத்தகைய ஒரு நிலையத்தைத் தாபிப்பதற்கு உதவிபெற முடியும் எனத் தோற்று கின்றது. இந்நோக்கத்துக்காக 1974 மதிப்பீடுகளில் அடையாள வாக்குப்பணமாக 10/- ரூபா காணப்படுகின்றது. ஆராய்ச்சிக்கு மிகவும் முக்கியமான மூலாதாரச் சேவைகளுளொன்று விஞ்ஞான, தொழினுட்ப ஆவணப்படுத்தலாக இருப்பதனால் 1974 இல் இதற்கென விரிவான திட்டமொன்று வரையப்பட்டு 1975 இல் அது செயற்படுத்தப்படுமென நம்பப்படுகின்றது.

## அந்நியச் செலாவணி அவசர நிதியம்

அந்நியச் செலாவணி அவசர நிதியமொன்றைத் தாபிப்பதற்கான உத்தேசக் கருத்து வெளி மூலவளங்கள் பணிப்பாளராலும் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப் பாட்டாளராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்துக்காக 50,000/- ரூபா அந்நியச் செலாவணி அளிக்க வாக்குத் தரப்பட்டது. 1973 க்கான அந்நியச் செலாவணி வரவு செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டதும் உண்மையான ஒதுக்கீடு செய்யப்படும். அந்நிறுவனத்திடமிருந்து வேண்டுகோள் விடுக்கப் படுகின்றதோ அந்நிறுவனத்தின் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட பின்னர் உண்மையான அவசர தேவைகளுக்கு மட்டுமே இந்நிதியத்திலிருந்து பணம் ஒதுக்குவதென மன்றம் முடிவு செய்தது. சம்பந்தப்பட்ட நிறுவனத்தாலேயே ரூபாப் பெறுமதி கொடுக்கப்பட வேண்டியிருக்கும்.

எனினும், 1973 இல் நாடு எதிர்நோக்கிய பலத்த அந்நியச்செலாவணி இக்கட்டுகளின் காரணமாக, இந்நோக்கத்துக்காக அந்நியச் செலாவணி ஒதுக்கப்படாமையினால், இத்திட்டத்தைச் செயற்படுத்த முடியவில்லை.

இலங்கையில் விஞ்ஞான, தொழினுட்ப வளம் பற்றிய அளவீடு

இந்த அளவீட்டின் இரண்டாவது கட்ட வேலை தொடர்ந்து நடாத்தப்பட்டு அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் தரம்பிரிக்கப்பட்டது.

தனிப்பட்ட விஞ்ஞானிகளுக்கு மூன்றுவது கேள்விக்கொத்து அனுப்பப்பட்டுள்ளது. தனிப்பட்ட விஞ்ஞானிகளுக்கும் அரசாங்கத் திணைக்களங்களிலும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களிலும் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தொழினுட்பவியலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள 2,600 கேள்விக்கொத்துகளுள் 903க்கே இன்றுவரை மறுமொழி கிடைக்கப்பெற்றுள்ளன. தனியார் துறைக்கு அனுப்பப்பட்ட 210 கேள்விக்கொத்துகளுள் 50 பரணப்படுத்தப்பட்டும் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. பெறப்பட்ட தகவலைத் தரப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றன.

இலங்கையில் விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டங்கள் விவரக்கொத்து:

இந்நாட்டிலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டங்கள் பற்றி முதலாவது விவரக்கொத்து, இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தின் தொழினுட்ப நூலகத்தினால் 1970 இல் தொகுக்கப்பட்டது. இத்தகைய ஒரு விவரக்கொத்து மூன்றுண்டுகளுக்கொருதடவையாவது தொகுக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது. எனவே 1973 மேயில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அரசாங்கத் திணைக்களங்களுக்கும், கூட்டுத் தாபனங்களுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் கேள்விக்கொத்தொன்று அனுப்பப் பட்டது. 1970/1973 காலப்பகுதியான மூன்றுண்டுக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி பற்றிய தகவல் திரட்டப்பட்டது. இவ்விடயத்தில் பகிரங்கத்துறையின் ஆதரவு 75% என்று கூறலாம். இதற்கு மாறாகத் தனியார் துறை ஆதரவு ஏறத்தாழ 80% ஆகும். விவரக்கொத்து இப்பொழுது தொகுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கைத் தேசிய விஞ்ஞானமன்றச் சஞ்சிகை.

இச்சஞ்சிகையின் முதலாவது வெளியீடு (தொகுதி 1 இல 1) 1973 ஆகஸ்ட்டில் வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகையின் விலை தபாற் செலவு உட்பட (உள்ளூரில்) 7.50 ரூபா எனவும் (வெளிநாட்டில்) 4 ஏனவும் மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்டது. இதன் இரண்டாவது இதழ் (தொகுதி 1 இல 2) ஜனவரி 1974 இல் வெளியிடப்படும். இனிமேல் ஜூலியும் டிசம்பரிலுமாக வருடத்திற்கு இரண்டு இதழ்கள் வெளியிடக் கருதப்பட்டுள்ளது.

பத்திரிகாசிரியர் சபையிலிருந்து டாக்டர் எம்.ரி.ஜி.பர்ணந்து விலகியதையடுத்து, பத்திரிகாசிரியர் சபையின் விதப்புரையின் மீது தேசிய தொல்பொருள்கள் திணைக்கள, உதவிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.பி.எப். செனரட்ணவை மன்றம் அச்சபைக்கு நியமித்தது.

<u>இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றச் சட்டமூலம்</u>

இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றச் சட்டமூலத்திற் வரைவு கைத் தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சருக்கு அவரது ஆலோசனைக்கெனச் சமர்ப்பிக்கப்பட்டது . இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தின் வேண்டுகோளின் பேரில் அமைச்சர் அவ்வரைவில் ஒரு பிரதியினை அக்கழகத்துக்கு ஆலோசனைக்கென அனுப்பி வைத்தார். இது தொடர்பான கலந்துரையாடலுக்கும் அமைச்சர் அக்கழகத்தின் உறுப்பினர் சிலரைச் சந்தித்தார்.

அமைச்சர் விரைவில் குறித்த சில திரிபுகளைச் செய்து அமைச்சரவையின் ஆலோசனைக்கென அதனை அனுப்பிவைத்தார். அமைச்சரவை அவ்வுத்தேசத்தினை அங்கீகரித்துள்ளதோடு வரைவுச் சட்டவாக்கம் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

<u>இலங்கையில் உணவு ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.</u>

குறிப்புரைகளுக்காக கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சின் செயலாளரிலுல் அனுப்பிவைக்கப்பட்ட மேற்குறித்த விடயம் தொடர்பான அறிக்கையொன்று, தேசிய விஞ்ஞானமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இக்கருமம் பற்றி ஆயவென மன்றம் உபகுழுவொன்றைத் தாபித்தது. இவ்வுபகுழு "இலங்கையில் உணவு ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் அறிக்கையொன்றைத் தயாரித்தது. இது இம்மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

<u>இலங்கையில் ஆராய்ச்சிக்குரிய முதன்மைகள்</u>

செயலாளர் அதிபதியினது விதப்புரையின் மீது, மன்றமானது பின்வரும் விடயங்களுக்கான உபகுழுக்களை நியமித்தது:-

(1) இயற்கை மூலவளங்கள்
(2) சுகாதாரம்
(3) கமத்தொழில்
(4) கைத்தொழில்
(5) சமூக விடயங்கள்

இவை பின்வருவனவற்றின் ஆராய்ச்சிக்கான முதன்மைகளை எடுத்துக்காட்டும்:-

(அ) அரசாங்கத்தின் 5 ஆண்டுத் திட்டத்தை மனதிற் கொள்ளுதல்
(ஆ) 5 ஆண்டுத் திட்டக் காலத்துக்கும் அப்பாற்பட்ட நெடுங்காலத் திட்டங்களை மனதிற் கொள்ளுதல்.

இக்குழுக்களுற் சுகாதாரம் பற்றிய குழுவும் சமூக விடயங்கள் பற்றிய குழுவும் தம்து அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. இயற்கை மூலவளங்கள் பற்றிய குழுவினதும் கமத்தொழில் பற்றிய குழுவினதும் வேலை முடியும் தறுவாயில் உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, கைத்தொழில் பற்றிய குழு கூட முடியவில்லை.

சருவதேச உறுப்புரிமை

பின்வரும் சருவதேசக் கழகங்களுக்கு இம்மன்றமே இலங்கையிலுள்ள மருவுறுப்பினர் ஆகும்:-

(அ) பொதுநல விஞ்ஞானக் குழு (பொவிகு)

(ஆ) விஞ்ஞானச்சங்கங்கள் சருவதேசியப்பேரவை (விசசபே)

(இ) வானொலி விஞ்ஞானச் சருவதேசியச் சங்கம் (வாவிசச)

(ஈ) ஆசிய விஞ்ஞானக் கூட்டுறவுக் கழகம் (ஆவிகூக)

பௌதிகவியல்சார் விஞ்ஞானச் சருவதேசியச் சங்கத்தில் (பௌவிசச) இணை உறுப்புரிமை நாடி 1973 செப்ரெம்பரில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் விண்ணப்பஞ் செய்யப்பட்டது. மேற்குறித்த விண்ணப்பம் தொடர்பிலான பௌ. வி. ச. சவின் முடிவு இன்னமும் தெரியவில்லை.

தேசிய குழுக்கள்:

பின்வரும் தேசிய குழுக்களினது செயற்பாட்டினை இம்மன்றம் ஒன்றிணைத்தது.

(அ) மனிதனும் உயிரினமண்டலமும் பற்றிய தேசிய குழு

(ஆ) வானொலி, விஞ்ஞானம், வானியல், விண்வெளிவிஞ்ஞானம் என்பவற்றுக்கான தேசிய குழு.

"மனிதனும் உயிரினமண்டலமும்" பற்றிய தேசிய குழு.

பரிசீலனையிலுள்ள காலத்தின்போது இக்குழு மூன்று தடவைகள் கூடிற்று இக்காலத்தின் போது,

(அ) மனிதனும் உயிரினமண்டலமும் பற்றிய செயற்றிட்டத்தின் கீழான ஆராய்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து நடாத்துவதற்காக, தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆராய்ச்சி மானியங்கள், புலமைப் பரிசில்கள் சபை, 18,750/- ரூபாத் தொகையினை அங்கீகரித்திருந்தது.

(ஆ) இக்குழு ஆராய்ச்சித் திட்டங்களிற் காணப்பட்ட முன்னேற்றங்களை ஆய்ந்தது.

(இ) 1973 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நான்கு ஆராய்ச்சித் திட்டங்கள் செயற்பட்டுக்கொண்டிருந்தன. முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒரு செயற்றிட்டங்களில் வேலை தொடங்கப்பட்டது. முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒரு வேலை தொடங்கப்பட முடியவில்லை.

(ஈ) "பிரம்பின் சூழலியலும், பிரம்புச் சாகுபடியும், பிரம்பைப் பதனிடுதலும்" என்ற தலைப்பிலான புதிய ஆராய்ச்சித் திட்டமொன்று இக்குழுவால் அங்கீரிக்கப்பட்டு, அது பற்றியஓர் அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு இக்குழு பேராசிரியர் எம்.டி.டசநாயக்காவைக் கேட்டுள்ளது.

(உ) மனிதனும் உயிரின மண்டலமும் பற்றிய செயற்றிட்டத்தின் சருவதேசிய இணைப்பு மன்றத்தினது வேண்டுகோளின் பேரில் பின்வரும் திட்டங்களில் தொழில் தொடங்குவதற்கென நாலு நிபுணர் குழுமங்களை அமைப்பதற்கு இக்குழு உடன்பட்டது.

(1) அயனமண்டலக் காட்டுச் சூழற்றொகுதிகளிலும் உப அயன மண்டலக் காட்டுச் சூழற்றொகுதிகளிலும் அதிகரித்துவரும் மனிதவினைச் செயற்பாடுகளின் சூழலியற்றாக்கங்கள்.

(2) மேய்ச்சற்றரை நிலங்களிலும், சவன்னு நிலங்களிலும், புற்றரைகளிலும், தந்திரங்களிலும் மனிதவினைச் செயற்பாடுகளினதும் பூமி உபயோகப் பழக்கங்களினதும் தாக்கவிளைவு

(3) குளங்கள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், கழிமுக நிலங்கள், பொங்கு முகங்கள், கரையோர வலயங்கள் என்பவற்றின் உபயோகத்திலும் மூலவளங்களிலும் மனிதவினைச் செயற்பாடுகளின் சூழலியற்றாக்கங்கள்

(4) மலைசார் சூழற்றொகுதிகளில் மனிதவினைச் செயற்பாடுகளின் தாக்கம்.

<u>வளிமண்டல விஞ்ஞானம், வானியல், விண்வெளி விஞ்ஞானம் என்பவற்றுக்கான தேசியக்</u> குழு.

'கொஸ்பார்' நிறுவனத்துடன் சேர்ந்து, சூரிய மண்டலமுதல் நிலம் வரையிலான பௌதிகவியல்சார் இடைக்கழக ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட சருவதேசிய காந்தமண்டல அறவீட்டுக்கு (1976/78) இலங்கையும் ஓர் அங்கத்தவராகப் பங்குபற்றுதற்குரிய சாத்தியக் கூறுகளைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கென மேற்படி குழுவின் கூட்டமொன்று 1973 ஜூலையில் கூட்டப்பட்டது. அவசியமான அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறும் என வைத்துக்கொண்டு, அக்குழுவின் தவிசாளர் மேற்படி அளவீட்டுக்கு எத்தன்மையினவான திட்டங்களைப் பொறுப்பேற்க முடியுமெனச் செயலாளர் அதிபதிக்கு அறிவிக்குமாறு அங்கத்தவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் குழலியல் முகாமை

திட்டமிடல் அமைச்சு, இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றத்தின் உதவியுடன் "இலங்கையில் குழலியல் முகாமை" பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தது. இவ்வறிக்கையானது செயலாளர் அதிபதியைத் தலைவராகவும், தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான உத்தியோகத்தரான டாக்டர் எம்.டபிள்யூ.ஆர்.என்.த சில்வாவை செயலாளராகவும் கொண்ட குழுவினால் தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கை இப்பொழுது திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

விஞ்ஞான ஆள்வலுத் திட்டம்

பரிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.கோபுர் 1973 இல் இத்தீவுக்கு வந்திருந்தபொழுது, இந்நாட்டில் போதிய விஞ்ஞான ஆள்வலுவை ஏற்பாடு செய்வதற்கான திட்டமொன்றை வரையுமாறு கேட்கப்பட்டார். திட்டமிடல் அமைச்சுக்கு அவர் சமர்ப்பித்த உத்தேசக் கருத்துக்களின் விளைவாக தேசிய விஞ்ஞான மன்றம் இத்திட்டத்தைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டது. இத்திட்டத்தை இம்மன்றம் பலதடவைகளில் ஆராய்ந்தது. முதன்முதலாக பரீட்சார்த்தமாக இத்திட்டத்தைத் தாவர விஞ்ஞான துறையில் செயற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது. இவ்வுபகுழுவின் ஆலோசனைக் கருத்துக்கள் இம்மன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இத்திட்டம் 1974 இல் செயற்படுத்தப்படவுள்ளது.

இலங்கை - இந்திய விஞ்ஞானக் கூட்டுறவு

1973, ஓகஸ்ட் 23 ஆந் திகதியிலிருந்து 28 ஆந் திகதிவரை புது டில்லியில் நடைபெற்ற, பொருளாதாரக் கூட்டுறவுக்கான இலங்கை இந்திய உப குழுவின் மூன்றாவது கூட்டத்தில், விஞ்ஞானத்துறையிலும் தொழில்நுட்பவியற்துறையிலும் கூட்டுறவுகாணும் நோக்குடன் பின்வரும் பந்தி சேர்த்துக் கொள்ளப்பட்டது.

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

விஞ்ஞானத்துறையிலும் தொழில்நுட்பவியற்துறையிலும் கூட்டுறவு காண்பதற்கான உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வது விரும்பத்தக்கதென அறியப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்.

(அ) தகவல், ஆவணப்படுத்தல், ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலியவற்றின் பரிவர்த்தனை

(ஆ) விஞ்ஞானிகளையும் தொழில்நுட்பவியலாளர்களையும் கொடுத்து மாற்றல்

(இ) குறித்த கூட்டு ஆராய்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்; அத்துடன்

(ஈ) தேர்ந்தெடுத்த துறைகளில் தொழில்நுட்பவியற் கருத்துப் பரிவர்த்தனை.

உடன்படிக்கையினது நியதிகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் பரஸ்பர அக்கறையுற்ற செயற்பாட்டுத் துறைகளைக் கண்டறிவதற்குமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞானிகளையும் தொழினுட்பவியலாளர்களையும் கொண்ட கோஷ்டியொன்றை இலங்கை, இந்தியாவுக்கு அனுப்பிவைக்கும் என உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது.

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுச் செயலாளரினது வேண்டுகோளின் பேரில் இக்கருத்து மன்றத்திலுல் ஆலோசனை செய்யப்பட்டு அதனைச் செயற்படுத்துவதற்கான விதப்புரைகள் ஆலோசனைக்கென அமைச்சுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

<u>சாதனங்களின் அளவீடு</u>

இலங்கையடங்கிலுமுள்ள ஆராய்ச்சி ஆய்வு கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் காணப்படும் மிகவிசேட தன்மை வாய்ந்த உபகரணங்களின் அளவீடொன்று மிகவும் பயனளிப்பதாகும் என மன்றம் கருதியது. இத்தகைய கணிப்பு ஒன்று இருக்குமாகுல் ஆராய்ச்சியாளர்களுக்கு வேண்டிய உபகரணம் எங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பதை எளிதில் கண்டறிய ஏதுவாக இருக்கும். இத்தகைய சாதன அளவீட்டில் உதவுவதற்கென ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கும் மன்றம் முடிவு செய்தது. அத்தகைய கணிப்பின் மூலம் கிடைக்கப்பெறும் தகவல் யாவும் மிகவும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் செயலகத்தால் எடுக்கப்பட்டுள்ளன. 1974 ஆம் ஆண்டின்போது இதனைச் செயற்படுத்தலாமென செம்பப்பட்டுள்ளது.

<u>சருவதேசிய நீரியல் பத்தாண்டு</u>

கட்டுரைப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குத் தலா 150/- வீதம் இரு பரிசுகள் அளிப்பதற்கான 300/- ரூபா தருமாறு சருவதேசிய நீரியல் பத்தாண்டுக் குழுவினுல் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதற்கான இலங்கைத் தேசியக்குழுவினுல் நடாத்தப்படும் ஒரு கண்காட்சியினைப் பார்வையிடும் பாடசாலை மாணவர்களுக்கிடையே இப்போட்டி மும்மொழிகளில் நடாத்தப்படவுள்ளது. பரிசுகள், இலங்கைத் தேசிய விஞ்ஞானமன்றக் கொடைகள் என்ற பெயரில் வழங்கப்படவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் மன்றம் இவ்வேண்டுகோளை அங்கீகரித்தது.

<u>தாபனங்கள் குழு</u>

பரிசீலனையிலுள்ள காலத்தின்போது இக்குழு மூன்று தடவைகள் கூடிற்று. வழமையான நிருவாக, மற்றும் நிதிவிசார் விடயங்களைப் பற்றி ஆயவெனக் கூடும் இக்குழு, மன்றப்பதவியினரை ஆட்சேர்ப்பதற்கான திட்டங்களையும் அங்கீகரித்தது. தேசிய விஞ்ஞானமன்றப் பதவியினரில் குறித்த சில சிற்றூழியர் தரங்களிலுள்ளவர்களுக்கான சேவை நிபந்தனைகளையும் இக்குழு அங்கீகரித்தது.

மன்றத்துக்கு வருகை தந்தோர்

மேரிலன்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கோஷ்டியொன்று ஜூலையில் இம்மன்றத்துக்கு வருகை தந்து இம்மன்றம் உறுப்பினர் சிலருடன் கலந்துரையாடல்கள் நிகழ்த்தினர். மேரிலன்ட் ஈாது கோஷ்டியினரில் பேராசிரியர் சிறில் பொன்னம்பெரும, பேராசிரியர் பிரன்சிஸ் சி ஸ்டாக், பேராசிரியர் ஜோன் எம் கூறிட்ஸ் என்போர் அடங்குவர். இவ்விஜயமானது இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கும் மேரிலன்ட் பல்கலைக்கழகத்துக்குமிடையேயான கூட்டு ஆராய்ச்சித்திட்டம் தொடர்பானதாகும்.

செயலாளர் அதிபதியும் இலங்கைத் தேசியவிஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான உத்தியோகத்தரான டாக்டர் எம்.டபிள்யூ.ஆர்.என்.த சில்வாவும் மனிதவிலைச் சூழலியல் தொடர்பான யுன்டிபி/யுஎன்/இகாபே கூட்டு ஆய்வுக் குழுவொன்றை 1973 ஓகஸ்டில் சந்தித்தனர். இலங்கையின் சூழலியற் பிரச்சினை பற்றி விரிவாக ஆராய்ந்தனர். இத்தாது கோஷ்டியில் டாக்டர் ஜெரால்ட் ஆர்வொஸ், திரு. டர்கன் மஞ்ஞன் திரு சின் மவுன் விவின் ஆகியோர் அடங்குவர்.

சீனமக்கள் குடியரசின் விஞ்ஞானக் கழகத்தைச் சேர்ந்த சீமாட்டி சாங் லோ - குவியும் சீமாட்டி செங் மி - பாயும் டிசம்பர் 1973 இல் மன்றத்திற்கு வருகை தந்து செயலாளர் அதிபதியுடன் கலந்துரையாடினர்

கடல்கடந்த பயணங்கள்

மன்றத்தின் செயலாளர் அதிபதியான டாக்டர் ஜீ.சி.என்.ஜயசூரியா, 1973 மார்ச்சில் ஜப்பான், டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய விஞ்ஞானக் கூட்டுறவுக் கழகத்தின் இரண்டாவது கூட்டத்துக்கு இலங்கைக் கோஷ்டியின் தலைவராகச் சென்று வந்தார்.

செயலாளர் அதிபதி 1973 மார்ச்சு 11 இத் தீவைவிட்டு வெளியேறி 1973 மார்ச்சு 18 திரும்பி வந்தார்.

## 11/ - நிருவாகம்

செயலகம்

இச்செயலகமானது கொழும்பு 7, கோர்டன் இடம் 69 ஆம் இலக்கத்தில் அது கொண்டிருந்த தற்காலிக வதிவிடத்தை விட்டு 1973 மார்ச்சு 29 ஆந் தேதியன்று, கொழும்பு 7 மெயிற்லன்ட் இடம் 47/5 ஆம் இலக்கத்திலுள்ள புதிய வளவுக்குக் குடிபெயர்ந்தது. பரிசீலனைக்குட்பட்ட காலத்தின்போது புதிய வளவுகளுக்குத் தளபாடமும், உபகரணமும், ஏனைய துணைவசதிகளும் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அக்கட்டத்தினை மிகவும் பயனுடையதாக்கும் நோக்குடன் எல்லைகளை வரையறுப்பதற்கும், அணுகுவீதி அமைப்பதற்கும் இன்னோரன்ன பிறமேலதிகச் சேவைகளைச் செய்வதற்கும் வழி கோலப்பட்டன.

1973 இல் செயலகத்தின் உபயோகத்திற்கெனப் புதிய மோட்டார் வாகனமொன்றையும் மன்றம் கொள்வனவு செய்ய முடிந்தது.

<u>பதவியினர்</u>

பரிசீலனைக்குட்பட்ட காலத்தின் போது பதவியினர் தொகை முப்பத்தாறாக இருந்தது. செயலாளர் அதிபதியும் மூன்று விஞ்ஞான உத்தியோகத்தர்களும் உதவிச் செயலாளர் தொடர்ந்தும் பதவிலிருந்தனர். மேலும் மூன்று விஞ்ஞான உத்தியோகத்தர்களும் கணக்காளர் ஒருவரும் 1973 இல் நியமிக்கப்பட்டனர்.

கொழும்புத்திட்டப் புலமைப்பரிசின் கீழ் ஐ.இராச்சியத்திலுள்ள மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் "விஞ்ஞானத்தினதும் தொழினுட்பவியலினதும் அமைப்பும் ஒழுங்கமைப்பும்" என்னும் விடயம் பற்றிப் பட்டத்தின் பின் ஆய்வு பெறுவதற்கென 1973 செப்டெம்பரிலிருந்து விஞ்ஞான உத்தியோகத்தரான திருமதி. எம். பி. த சில்வாவுக்கு ஓர் ஆண்டுக் கல்வி லீவு வழங்கப்பட்டது.

பரிசீலனைக்குட்பட்ட காலத்தில் மேலதிக எழுதுவினைஞர்கள் உதவி பெறப்பட்டது.

<u>மன்ற நூலகம்</u>

பரிசீலனைக்குட்பட்ட காலத்தின் போது நூலக மொத்தம் பின்வருமாறு :-

<u>இருப்பு</u> :-

1. <u>புத்தகங்கள்</u>

| | |
|---|---|
| 31.12.73 இல் உள்ளபடி மொத்த எண்ணிக்கை | 691 |
| 1973 இல் சேர்க்கப்பட்டவை | 232 |
| நன்கொடைகளாகப் பெறப்பட்டவை | 116 |

2. <u>சஞ்சிகைகள்</u>

| | |
|---|---|
| வெளிநாட்டின் | 17 |
| உள்நாட்டின் | 5 |
| உதவுதொகை மூலம் பெறப்பட்டன | 20 |

3. பெறப்பட்ட அறிக்கைகளும் ஆவணங்களும் 142.

-*-

## பின்னிணைப்பு - 1

## 1973 ஆம் ஆண்டிற்கான நிலையியற் குழுக்கள், அவைகளின் உறுப்பினர்கள்

### I. ஆராய்ச்சி மானிய புலமைப் பரிசிற் சபை:

திரு. டி. பி. பட்டியாராச்சி (தலைவர்)
பேராசிரியர் பி. ர. அபேவிக்கிரமா
கலாநிதி எம். ர. வீ. தேவநாதன்
கலாநிதி ஜீ. சி. என். ஜயசூரியா
திரு. எஸ். ஏல். லோறென்சியஸ்
கலாநிதி ஜே. டப்ளியு. என். பீரிஸ்
திரு. எம். எம். பிள்ளை
பேராசிரியர் கே. என். செனிவிரத்ன
கலாநிதி சீதா றெட்ரிக்கோ (செயலாளர்)

### II. தாபனக் குழு:

கலாநிதி ஒஸ்மண்ட் ஜயரத்தின (தலைவர்)
திரு. டீ. பீ. பட்டியாராச்சி
கலாநிதி ஜீ. சி. என். ஜயசூரியா
கலாநிதி ஆர். சி. டீ. சில்வா
திரு. ஜே. சி. பி. ஜயசிங்கா (செயலாளர்)

### III. தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகை: பதிப்புச் சபை:

கலாநிதி ஜீ. சி. என். ஜயசூரியா (தலைவர்)
பேராசிரியர் பீ. டப்ளியு. எப்பசிங்க
கலாநிதி எம். எல். ரி. கன்னங்கரா
பேராசிரியர் எஸ். மகாலிங்கம்
செல்வி குளோடா நெத்சிங்க (செயலாளர்-பதி. I. இல. 2-1973)

கலாநிதி சி. ஆர். பாணபொக்கே
திரு. டீ. பீ. பட்டியாராச்சி
பேராசிரியர் கே. என். செனிவிரத்ன
திரு. ர. ஈ. கே. திசவீரசிங்க
கலாநிதி ஆர். ஓ. பி. விஜயசேகரா
திருமதி மரீ டீ. சில்வா (செயலாளர்-பதி. I இல. 1 - 1973)

IV. ரேடியோ, விஞ்ஞானம், வளி மண்டலவியல், விண்வெளி விஞ்ஞானம் ஆகியவற்றுக்கான தேசியக் குழு:

கலாநிதி எம்.எல்.ரி. கன்னங்கரா (தலைவர்)
திரு. ஈ.கே.பி. எக்கநாயக்கா
பேராசிரியர் பி.சி.பி. பெர்னாண்டோ
பேராசிரியர் சி. தகநாயக்கா
திரு. எச்.டி.எம்.ஏ. குணவர்த்தன
கலாநிதி டீ.சி.என். ஜயசூரியா
கலாநிதி ஜே.டப்ளியூ. ஜயரத்தின
திரு. டப்ளியூ.எம்.டீ. பெர்னாண்டோ
திரு. டீ.எஸ். ஜயசூரியா
கலாநிதி ஈராங்கனி தாபா (செயலாளர்)

V. மனிதனும் உயிர்த்தோற்ற மண்டலமும் மீதான தேசிய குழு:

பேராசிரியர் பீ.ஜே. அபேவிக்கிரமா (தலைவர்)
திரு. கே.டீ. சூரியதாச
பேராசிரியர் எச். குருஸ்
பேராசிரியர் சி. தகநாயக்கா
கலாநிதி டீ.சி.என். ஜயசூரியா
திரு. ஈ.ஈ. ஜெயராஜ்
திரு. ஏ.எஸ்.ஏ. பக்கீர்
பேராசிரியர் பீ.பீ.டீ.எல். சிரிவர்த்தன
